# DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.96/2025**
Prosecution Witness P.W.15

Name : **திரு.கோபிநாத்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 18.02.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது போடி நகர் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.02.2025–ம் தேதியன்று தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில் போடி நகர் காவல் நிலைய குற்ற எண். 959/2019 வழக்கை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். 24.02.2025–ம் தேதியன்று சாட்சிகள் ஜெய்லானி, திருமதி. உபைதா, பாசித் ரகுமான், திருமதி.பசுபதி, திருமதி.ரபியா பீவி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே அவர்களது வாக்குமூலம் பதிவு செய்தேன் இவ்வழக்கில் அப்பாஸ் மந்திரி இறந்ததால் அவரது வாக்குமூலம் நான் பதிவு செய்ய இயலவில்லை.

2. பின்னர் 25.02.2025ம் தேதியன்று சாட்சிகள் நிஷா பானு, திரு. கோகுல பாண்டிய சங்கர் மருத்துவர் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னுடைய விசாரணையில் இவ் வழக்கில் சட்டப்பிரிவை 174 Crpc யிலிருந்து சட்டப்பிரிவு 109,302 IPC–யாக சட்ட மாறுதல் செய்து எதிரிகள் அனீஸ் பாத்திமா மற்றும் ஜெயபாண்டி ஆகியோர்களை

இவ்வழக்கில் எதிரிகளாக சேர்த்து சட்ட மாறுதல் மற்றும் வழக்கின் எதிரிகளை சேர்த்தல் அறிக்கையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

3. எனது புலன் விசாரணையில் சம்பவம் உண்மை என்பதால் எதிரிகளை தேடி வந்த நிலையில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி 26.02.2025 ஆம் தேதியன்று 8.00 மணிக்கு புது காலனி, சுப்புராஜ் நகர், ஓம் சக்தி கோயில் அருகில் வைத்து பெண் சார்பு ஆய்வாளர் திருமதி.கிருஷ்ணவேணி மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் சாட்சிகள் அமானுல்லா மற்றும் ஜோஷ் ஆகியோர்கள் முன்னிலையில் அனீஸ் பாத்திமா என்பவரை 08.10 மணிக்கு விசாரித்து எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உடன் வந்த சார்பு ஆய்வாளர் திருமதி. கிருஷ்ணவேணி என்பவர் உதவியுடன் மடிக்கணினி பதிவு செய்து பிரிண்ட் எடுத்து, எதிரிக்கு படிக்க கொடுத்து எதிரி படித்துப் பார்த்து கையொப்பமிட்டார். சாட்சிகள் மற்றும் நான் கையொப்பம் செய்தோம்.

4. பின்னர் 9.20 மணிக்கு எதிரி ஜெயபாண்டி அதே சாட்சிகள் முன்பாக விசாரணை செய்தபோது அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சார்பு ஆய்வாளர் உதவியுடன் பதிவு செய்து, பிரிண்ட் எடுத்து எதிரிக்கு படிக்க கொடுத்து, எதிரி கையொப்பம் செய்து, பின்னர் சாட்சிகளும், நானும் கையெழுத்து செய்தோம். எதிரி கைது செய்த விபரம் பற்றி 2–ம் எதிரியின் தாயாரான செல்வராணி என்பவருக்கு தகவல் கொடுத்து எதிரிகளுடன் 10.45 மணிக்கு நிலையம் வந்து எதிரிகளை பாராவசம் ஒப்புவித்தேன்.

5. இதற்கு பின்னர் எதிரிகளை தக்க வழி காவல் மூலம் நீதிமன்றம் போடிநாயக்கனூர் அவர்கள் முன்பாக ஆஜர் படுத்தினேன். பின்னர் சாட்சிகள் அமானுல்லா ஜோஸ் ஆகியோர்களை அன்றைய தினமே விசாரணை செய்து அவர்களது வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 04.03.2025–ம் தேதியன்று சார்பு ஆய்வாளர் திருமதி. மகேஸ்வரி, தலைமை காவலர் 1624 திரு.ஜெயச்சந்திரன் சார்பு ஆய்வாளர் திருமதி.கிருஷ்ணவேணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

6. பின்னர் எனது விசாரணையில் எதிரிகள் அனீஸ் பாத்திமா மற்றும் ஜெயபாண்டி ஆகியோர்கள் தங்களது தொடர்பிற்கு இடையூறாக இருப்பதாக கருதி இறந்து போனவருக்கு சிறிது சிறிதாக பூச்சி மருந்து கொடுத்து அதன் தாக்கத்தின் காரணமாக 10.11.2019–ம் தேதியன்று 9.30 மணிக்கு இறப்பதற்கு காரணமாக இருந்து கொலை குற்றம் புரிந்துள்ளதால் எதிரிகள் மீது சட்ட பிரிவு 109, 302 IPC–யாக 01/04/2025–ம் தேதியன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். நான் தயார் செய்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.17.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

1. இந்த வழக்கு சந்தேக மரணமென்று 2019–ம் ஆண்டு வழக்கு பதிவு செய்யப்பட்டதென்றால் சரிதான். அப்போது இருந்த ஆய்வாளர்கள் இந்த வழக்குக் கோப்பை பார்க்காமல் வெகு நாட்களாக அப்படியே வைத்து விட்டார்கள், அதன் காரணமாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில் நான் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, நான் சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

2. சுமார் இறப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்தே இறந்து போனவர் படுத்த படுக்கையாக நடமாட்டமின்றி நோய்வாய்ப்பட்டு படுத்து இருந்ததாக தெரிந்து கொண்டேன். அவருக்கு ஏதேனும் நோய்வாய்ப்பட்டு இது சம்பந்தமாக அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டாரா என்பது தொடர்பான ஆவணங்கள் ஏதேனும் நான் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அவருக்கு ஏற்கனவே காசநோய் இருந்து, அந்த நோயானது இறப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு அவருக்கு சரியாகிவிட்டது. அது சம்பந்தமாக எந்த மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்று வந்தார் என்ற விபரத்தை நான் எனது விசாரணையின் வாயிலாக தெரிந்து கொண்டேனா என்றால் அது பற்றி நான் தெரிந்து கொள்ளவில்லை.

3. 1வது மற்றும் 2 வது எதிரிகளுக்கு இடையே தொடர்பு ஏதேனும் உண்டா என்பதை நான் விசாரணை செய்தேன். 7 வருடங்கள் ஆன காரணத்தினால் அது சம்பந்தமாக சி.டி.ஆர் எதுவும் கிடைக்காது என்பதால் அது பற்றிய விபரங்கள் எதுவும் என்னால் எடுக்க இயலவில்லை. ஜமாத் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து முதல் எதிரி மற்றும் அவரது கணவர் வீடு மற்றும் கடைகள் கட்டி நடத்தி வந்தது தெரிய வந்தது, இறந்து போனவர் இறந்தபிறகு அந்த கடை மற்றும் வீடானது ஆக்கிரமிப்பில் அகற்றப்பட்டு கடை மற்றும் வீடு இடிக்கப்பட்டது என்பதால் அந்த கடை குறித்த விபரங்கள் எதுவும் என்னால் விசாரணை செய்ய இயலவில்லை.

4. எனது விசாரணையில் 2-ம் எதிரி வாயிலாகத்தான் பூச்சிக்கொல்லி மருந்து அவர் தோட்டத்திற்கு பயன்படுத்துவதை அவர் முதல் எதிரிக்கு கொடுத்து இந்த வழக்கில் அந்த இறந்து போனவருக்கு பூச்சிக்கொல்லி மருந்து சிறுக,சிறுக கொடுக்கப்பட்டுள்ளது தெரிய வந்தது, ஆனால் விசாரணையில் 2-ம் எதிரி எந்த பூச்சி மருந்து எந்த கடையில் இருந்து வாங்கப்பட்டது என்ற விபரத்தை தெரிவிக்கவில்லை. நானும் அக்கம் பக்கத்தில் இருந்த பூச்சிக்கொல்லி மருந்து கடைகளில் விசாரித்தேன், அது பற்றிய தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை.

5. எதிரிகளின் வீட்டை நான் சோதனை செய்தேனா என்றால் இறந்து போனவர் குடியிருந்த வீடு இடிக்கப்பட்டு விட்டது என்பதால் அந்த வீட்டிலிருந்து எந்த சோதனையும் மேற்கொள்ள இயலவில்லை. தற்போது எனது விசாரணையில் எதிரிகள் இருவரும் ஒன்றாகத்தான் ஓம் சக்தி கோயில் அருகில் வீடு வாடகைக்கு எடுத்து ஒன்றாக வசித்து வருகிறார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கானது 2019-ம் ஆண்டு ஜனவரி மாதம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு யார், யார் வந்தார்கள் என்ற விபரத்தை நான் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன், அப்பாஸ் த/பெ.சாகுல் ஹமீது புகார்தாரருடன் உடன்

வந்த விபரம் தெரிந்து கொண்டேன்.புகார்தாரர் நீதிமன்றத்தில் சாட்சி அளிக்கும் போது தனது தாயார் மற்றும் இறந்து போனவர் இரண்டு குழந்தைகளுடன் வந்த புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றும் அவ்வாறு கொடுத்த முதல் புகார் இந்த வழக்கிற்காக மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. பின்னிட்டு இந்த வழக்குக்காக இந்த புகாரானது எங்களால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் முதல் தகவல் அறிக்கையில் காலம் நம்பர் 14ல் புகார்தாரின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இந்த புகாரானது 2019 பதிவு செய்யப்பட்டதாக சொல்லும் வழக்கு 2021-ல் தான் அனுப்பப்பட்டுள்ளது என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சாட்சிகள் அனைவரும் நீதித்துறை நடுவர் மூலமாக பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் எங்கள் ஆலோசனையின் பெயரில் பின்னிட்டு மிகுந்த காலதாமதத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. 2025-ம் ஆண்டு தான் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை மற்றும் எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றும், காலதாமதத்திற்கான எந்த விளக்கமும், ஆவணமும் இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரின் அண்ணன் இருப்பதாக அப்பாஸ் மந்திரி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அவரை விசாரித்தால் உண்மை நிலை தெரியும் என்பதால் அவர் இந்த வழக்கில் நான் வேண்டுமென்றே விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. இரண்டாவது எதிரிகளின் உறவினர்களையோ, சம்பவ இடத்தை சுற்றியுள்ள அக்கம், பக்கத்தில் குடியிருப்பவர்களையோ வேண்டுமென்று இந்த வழக்கில் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் தயார் செய்ததாக சொல்லும் வரைபடத்தில் 1வது எதிரி அங்கு பெட்டிக்கடை நடத்தி வந்தது போல் எந்த குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்று எந்தவித வழக்கு சொத்துக்கள் குறித்து

சோதனை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எந்த பொருட்களும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

5. இறந்த நபரின் துணிமணிகளை நான் கைப்பற்ற வில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் இறந்து போன நபர் காசநோய் பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்து வந்தார் என்ற விவரம் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அவர் என்ன மாத்திரை சாப்பிட்டு வந்தார், எவ்வளவு நாட்களுக்கு முன்பு அவருக்கு உடல்நிலை சரியானது போன்ற விபரங்கள் எதுவும் நான் வேண்டுமென்றே இந்த வழக்கில் விசாரணை செய்து அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதையும் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. எனது விசாரணையில் புகார்தாரர் இரவு 2.30 மணிக்கு இறந்து போன நபரின் வீட்டிற்கு வந்து பார்த்ததாக புகார்தாரரோ, இரண்டாவது சாட்சியோ எனது விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் விசாரணை செய்த சாட்சிகளான 1 மற்றும் 2 இருவரும் 2–ம் எதிரி பெயரை குறிப்பிட்டு சாட்சி அளிக்கவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளார்கள். எனது விசாரணையில் சாட்சி.பசுபதி, இறந்து போன அபிபுல்லா குடி போதைக்கு அடிமையாகி உடல் நலம் பாதிக்கப்பட்டு வீட்டிலேயே இருந்து வந்தாரென்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

7. இறந்து போனவரது மகனான பாசித் ரகுமான் பிரேத விசாரணை அறிக்கையில் தனது தந்தையின் இறப்பை முதல் முதலில் தெரிந்த நபர் என சொல்லியுள்ளார் என்றும், விசாரணையில் அவர் கல்லூரியில் படித்துக் கொண்டு இருந்ததாகவும் கேள்விப்பட்டு வந்ததாக சொல்லியுள்ளாரென்றும், எனவே மேற்கண்ட சாட்சி வழக்குக்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அனைத்து சாட்சிகளும், ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

8. இந்த வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்பட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அதிகமான காலதாமத்துடன் தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வேண்டுமென்றே எதிரிகளுக்கு எதிராக உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் தற்போது குடியிருந்து வருவதாக சொல்லும் ஓம் சக்தி கோயில் அருகில் உள்ள சாட்சிகள் யாரையும் நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் குடியிருந்து வந்த வீட்டின் உரிமையாளரையும் விசாரித்து அவரது வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

9. எதிரிகள் தொடர்பில் இருந்தார்கள் என்பது தொடர்பான ஆவணங்கள் எதுவும் நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்தவித சான்று பொருட்களும் இந்த வழக்கில் கைப்பற்றாமல் முறையாக விசாரணை மேற்கொள்ளாமல் நான் எதிரிகளுக்கு, எதிராக ஒருதலைப் பட்சமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன நேரத்தில் வைத்து எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.18 17:18:34 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.